# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 22.03.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கிழக்கு மாகாணத்தை பார்க்கும் போது எனக்கு பயமாக இருக்கிறது

## யாழில் இரா.சாணக்கியன்



(எஸ்.தில்லைநாதன்)

இன்றைய சமகால அரசியலில் கிழக்கு மாகாணத்தை பார்க்கும் போது உண்மையிலேயே பயமாகத்தான் இருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு நாளும் புதுப்புது பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன

02 ஆம் பக்கத்தில்...

# தமிழரசுக்கட்சியில் ஆற்றல் உள்ள படித்த இளைஞர்கள் யுவதிகளுக்கு சரியான இடம் கொடுக்கப்பட வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

(எஸ். தில்லைநாதன்)

தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளில் இளைஞர்கள் வெகுவாக பங்குகொள்ள வேண்டிய காலம் வந்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி அல்வாய் பகுதியில் அமைந்துள்ள தமிழரசுக்கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை(20) மாலை இடம்பெற்ற இளைஞர்களுக்கிடையான சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர்

02 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட மயிலாம்பாவெளியில் உதவும் கரங்கள் அமைப்பின் உதவியுடன் தொழில் முயற்சி மையமொன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டபோது...

### ஐ.நா. பேரவை அமர்வு;

# இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் முஸ்லிம் நாடுகள் இருக்கிறன

### சாய்ந்தமருதில் வீரசிங்க எம்.பி. நம்பிக்கை



(த. தர்மேந்திரா)

இடம்பெற உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாக முஸ்லிம் நாடுகள் நடந்து கொள்வதாக உள்ளன என்று அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திகாமடுல்ல

02 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பிரதேசத்தில் உள்ள குருவிக்கல் கல்வாரி மலையில் நடைபெற்ற இயேசுவின் சிலுவைப் பாதை அயல் பங்குகளின் ஒத்துழைப்போடு சனிக்கிழமை நடைபெற்றபோது..

# சமூகத்தின் சவால்களை தெளிவுபடுத்தும் பொறுப்பு முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு உள்ளது

### சிரேஷ்ட எழுத்தாளர் நிலாமின் நூல் வெளியீட்டு விழாவில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!




முஸ்லிம் சமூகத்தின் ஊடகவியலாளர்கள், நாட்டில் இன்று முஸ்லிம்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள தேவையற்ற இடைஞ்சல்கள், சந்தேகங்களைக் களையும் வகையில் பணியாற்ற முன்வர வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மினுவாங்கொடையில், நேற்று (20) நடைபெற்ற மூத்த ஊடகவியலாளர்

02 ஆம் பக்கத்தில்...

# கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் பிணையில் விடுதலை



(எப்.முபாரக் )

வன இலாக்கா அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த கந்தளாய் பிரதேச சபையின் மொட்டு அணி உறுப்பினரான விஜே விக்ரம லமா ஹேவா என்பவரை இரண்டு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்குமாறு கந்தளாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# வாழைச்சேனையில் புதையல் தோண்டிய எட்டு பேர் கைது



( ந.குகதர்சன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொத்தானை பகுதியில் வைத்து சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட எட்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...










## வாழைச்சேனையில் புதையல் தேண்டிய 8...

வாழைச்சேனை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார். வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்டபொத்தானை பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக வாழைச்சேனை விசேடஅதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து வாழைச்சேனைபொலிஸாருடன்இணைந்து அதிரடி நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கண்டி, வாழைச்சேனை, ஓட்டமாவடி, ரத்னபுர, வெலிக்கந்தை ஆகிய பகுதிகளைச்சேர்ந்த எட்டு நபர்களும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பூசைப் பொருட்கள்மற்றும் புதையல் தோண்டும் ஆயுதப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக வாழைச்சேனைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத செயல்களை தடுக்கும் வகையில் வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர்ஜி.ஜெயசுந்தரவின் வழிகாட்டலில், வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விஷேட குழு ஒன்று என துதலைமையில் செயற்பட்டு வருவதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும்தெரிவித்தார்.

## சமூகத்தின் சவால்களை தெளிவுபடுத்தும்...

'ஈழத்துநூன்' கலாபூஷணம் எம்.ஏ.எம். நிலாம் எழுதிய 'தட்டுத்தாவாரம்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஆயிரம் வருடங்கள் பழமைவாய்ந்த இலங்கை முஸ்லிம்களின் தேசப்பற்று, இன்று பிற சமூகங்களால் சந்தேகிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏதோ ஒரு சில விஷமிகள் செய்த இந்த இழிசெயலுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் பழிதீர்க்கப்படும் ஆபத்தையே நாம் இன்று எதிர்கொள்கின்றோம். இந்த அபாயத்தை இல்லாமல் செய்வதும், உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி எழுதுவதும் முஸ்லிம் ஊடகவியலாளர்களின் சமூகப் பொறுப்பாகும்.

கட்சிக்காக அல்லது ஒரு தலைமைக்காக எழுதும் மன நிலைகள் ஊடகவியலாளர்களிடம் இருந்தது. இந்த மனநிலைகளைக் கைவிட்டு, சமூகத்துக்காக எழுதும் வரலாற்றுப் பணிக்குள் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் வரவேண்டியுள்ளது. இதற்கு நிலாம் போன்ற மூத்த ஊடகவியலாளர்கள் வழிகாட்ட வேண்டும். எமது மார்க்கத்திலும், ஹதீஸிலும் கைவைக்குமளவுக்கு அல்லது அவற்றைக் கொச்சைப்படுத்துமளவுக்கு, நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன. இவற்றைத் தெளிவுபடுத்தி எழுதும் ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. சிங்கள, கிறிஸ்தவ மற்றும் இந்து சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்கள் பற்றி பரப்பப்படும் போலிப் பிரச்சாரங்களுக்கான பதிலடி, எமது எழுத்தாளர்களிடமே உள்ளன.

நண்பர் நிலாமின் நட்புக்கு கிடைத்த பெறுமானம்தான் எல்லோரும் அவரை 'நிலாம் நானா' என்று அன்புடன் அழைப்பதாகும். எனது ஊடகப் பொறுப்பாளர்களாகவிருந்த சுஐப். எம். காஸிம் மற்றும் இர்ஷாத் ரஹ்மதுல்லா ஆகியோரின் குடும்ப உறவுடனும் நிலாமுக்குத் தொடர்புள்ளது என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

ஊரே திரண்டு நிலாமுக்கு விழா எடுப்பது அவரது நேர்மைக்கான சாட்சியங்கள்தான். இதனால் நானும் பெரும் மகிழ்வுறுகிறேன். கலைஞர்கள், உலமாக்கள், ஊர்மக்கள், அரசியல்வாதிகள் எனப் பலரையும் இன்றைய விழா ஒன்றுபடுத்தி உள்ளது' என்று கூறினார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஊர்ப்பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.







# 157 வது பொலிஸ் ரணவிரு தினம் மட்டு. மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக அனுஸ்டிப்பு

## கண்ணீர் மல்க மலரஞ்சலி





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

இலங்கையில் இறந்த பொலிஸ் வீரர்களை நினைவு கூறும் 157வதுபொலிஸ் வீரர்கள் (ரணவரு தினம்) நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

மட்டக்களபபு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை முன்றலில் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க தலைமையில் நடைபெற்ற பொலிஸ் ரணவிரு தின நிகழ்வில் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சர்வ மதத் தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள் உட்பட பலரும் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பேணி கலந்து கொண்டனர்.

உயிரிழந்த பொலிசாரின் நினைவாக சிரேஜ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை முன்றலில் அமைக்கப்பட்டுள்ள நினைத் தூபியில் பொலிஸ் அதிகாரிகளும் உயிரிழந்த பொலிசாரின் உறவினர்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

யுத்தம் மற்றும் காரணங்களால் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள் கண்ணீர் மலக மலரஞ்சலி செலுத்தியமை விசேட அம்சமாகும்.



## கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் பினையில் விடுதலை...

கந்தளாய் பிரதேச சபையின் உறுப்பினரான இவர் வான் எல பிரதேசத்திலுள்ள காடுகளை அழித்து தனது ஆதரவாளர்களுக்கு வழங்குவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்கு சென்ற வன இலாகா அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக வான் எல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பிரதேசசபை உறுப்பினரைக் கைது செய்து கந்தளாய் நீதிமன்ற நீதவான் திஸானி தேனபது முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை இரண்டு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் இருவர்சாட்சிகள்கையொப்பமிட்ட பின்னர் விடுவிக்குமாறு கந்தளாய் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த வழக்கு தொடர்பில் எதிர்வரும் ஐந்தாம் மாதம் 20ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் கந்தளாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஐ.நா. பேரவை அமர்வு; இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில்...

தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ. டி. வீரசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி பொறுப்பாளரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் குழு உறுப்பினருமான றிஸ்லி முஸ்தபாவின் ஏற்பாட்டில் காரைதீவு தொடக்கம் கல்முனை கடற்கரை பள்ள்வாசல் வரையிலான 3. 4 கிலோ மீற்றர் கடற்கரை வீதிகளை காபட் வீதிகளாக புனரமைக்கின்ற வேலை திட்டம், சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் புதிய கரபந்தாட்ட ஆடுகளத்தை நிறுவுகின்ற வேலை திட்டம் ஆகியவற்றுக்கான ஆரம்ப விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இம் மைதான சுற்றாடலில் இடம்பெற்றன.

இவற்றில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ஸ, காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் பிரதி தவிசாளர் ஏ. எம். ஜாஹிர், றிஸ்லி முஸ்தபாவின் இணைப்பாளர் அல் ஜவாஹிர் ஆகியோர் அடங்கலான பேராளர்கள் கலந்து கொண்டனர்.

இவற்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோது வீரசிங்க எம். பி மேலும் தெரிவித்தவை வருமாறு

எமது இராணுவத்தினர் நாட்டுக்கு பெருமை சேர்த்தவர்கள். இவர்களை மாட்டுவதற்கு ஐ. நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் பகீரத முயற்சிகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. ஆனால் முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளன. அதற்காக இத்தருணத்தில் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

பெரமுன அரசாங்கம் மலர்ந்து 06 மாதங்கள்தான் ஆகி உள்ளன. கொரோனா தொற்று நோய் பரம்பல் காரணமாக நாடே ஸ்தம்பித்து உள்ளது. ஆனால் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றி தந்த வண்ணமே உள்ளது. ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டம் போன்றவற்றை உதாரணமாக சொல்ல முடியும்.

றிஸ்லி முஸ்தபா கடந்த பொது தேர்தலில் பெரமுனவில் இம்மாவட்டத்தில் போட்டியிட்ட சக வேட்பாளர் ஆவார். ஆயினும் அவரால் வெற்றி பெற முடியாமல் போய் விட்டது. ஆயினும் மக்களுக்கான சேவைகளை மிகவும் சிறந்த முறையில் இயலுமான வரை முன்னெடுத்த வண்ணம் உள்ளார். இதற்கு இன்றைய விழாக்கள் முன்னுதாரணங்கள் ஆகும்.

கடந்த பொது தேர்தலில் எமக்கு கிடைக்க பெற்ற வெற்றியில் சகோதரர் றிஸ்லி முஸ்தபாவின் பங்களிப்பு காத்திரமானது. ஆகவேதான் எமது கட்சியும், எமது அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இவருடைய வேலை திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய வண்ணம் உள்ளோம்.

நான் இங்கு திரண்டு உள்ள ஆதரவாளர்களுக்கு குறிப்பாக இளையோர்களுக்கு ஒரு முக்கியமான விடயத்தை சொல்லி வைக்க விரும்புகின்றேன். றிஸ்லி முஸ்தபா உங்களுக்கு கிடைத்து உள்ள மகத்தான வரம் ஆவார். இவர் உங்கள் தலைவராக விளங்குவதற்கான தகைமைகள் அனைத்தும் உடையவர். இவரை பலப்படுத்த வேண்டியது உங்கள் கடமை ஆகும்.

## கிழக்கு மாகாணத்தை பார்க்கும் போது எனக்கு பயமாக இருக்கிறது...

எனதமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர் அல்வாய் இலகடிப் பகுதியில் அமைந்துள்ள தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வடமராட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (20) மாலை இடம்பெற்ற இளைஞர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார் தொடர்ந்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான பேரணியின் பிற்பாடு இன்றுதான் யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வருவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. உண்மையிலேயே அடிக்கடி அனைத்துப் பிரதேசங்களுக்கும் விஜயம் செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆனால் இப்போதும் கூட மட்டக்களப்பில் சொல்லிக் கொண்டிருப்பார்கள் மட்டக்களப்பிலுள்ள பிரச்சனைகளை பார்க்க நேரமில்லை யாழ். மாவட்டத்தில் போய் நிற்கிறார்கள் என நிச்சயமாக சில விமர்சனங்களை முன் வைப்பார்கள். இருந்தாலும் கூட வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களுக்கும் போய் மக்களை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு தொடர்ந்து இருக்கிறது.

சமகால அரசியலை பார்த்தால் உண்மையிலேயே கிழக்கு மாகாணத்தை பார்க்கும்போது எனக்கு பயமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒரு புது பிரச்சனை வந்துகொண்டு இருக்கிறது.

யாழ். மாவட்டத்திலோ, வட மாகாணத்தில் இருக்கின்ற பிரச்சனைகளை விட கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு புது பிரச்சனை.

இன்று காலையில் கூட ஆயிரத்து 500 ஏக்கர் முந்திரி காணி சிவில் பாதுகாப்பு படையினர் மட்டக்களப்பு அம்பாறை எல்லையிலே காணிகளை ஆயத்தப்படுத்துவதாக நாங்கள் அறிந்திருக்கின்றோம். வருங்காலத்தில் அவர்கள் வடக்கு மாகாணத்தையும் நோக்கி வரக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

## தமிழர சுக்கட்சியில் ஆற்றல் உள்ள படித்த இளைஞர்கள்...

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் யாழ்ப்பாணம் வந்திருக்கும் வேளையில் எமது இளைஞர்கள் அவருடனான சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இச்சந்திப்பு இளைஞர்களுக்கிடையேயானது என சொல்லப்பட்டாலும் அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். ஆனால் விசேடமாக இளைஞர்களை குறிவைத்து சந்திப்பு ஏற்படுவதற்கான காரணம் தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளில் இளைஞர்கள் பங்கு கொள்ள வேண்டிய காலம் வந்துள்ளது.

ஜனநாயக அரசியலில் கடந்த 10, 11 வருடங்களாக இளைஞர்களுக்கு நாட்டம் குறைவாக இருந்து வந்துள்ளது. ஆனால் வாக்காளர்களை பொறுத்தவரையில் இப்போது வருடாவருடம் வாக்காளர்கள் எண்ணிக்கையில் இளைஞர்களின் எண்ணிக்கை உயர்ந்து செல்கிறது. அத்தோடு கடந்த தேர்தலில் மற்றைய கட்சிகள் என்ன விதமாக இளைஞர்களை கவர்ந்து இழுத்தார்கள் என்பதை நாங்கள் கடந்த காலங்களில் பார்த்து படித்து உள்ளோம். ஆனால் நாங்கள் தமிழ் மக்களின் ஆதரவை பெருவாரியாக பெற்ற கட்சி. அந்த நிலையை இன்னமும் தக்க வைத்து இருக்கின்றோம் எனினும் எங்கள் செல்வாக்கு குறைந்திருக்கிறது. இதற்கு ஒரு காரணம் இளைஞர்கள் மத்தியில் எங்களுடைய செல்வாக்கு போதாது. ஆகவே எங்கள் கட்சி இளைஞர்களை இளைஞரணி என ஒரு மூலையில் ஒதுக்கிவைக்காது கட்சியின் முக்கிய செயற்பாடுகளில் அவர்களை ஈடுபட வைக்க வேண்டும். இவ்வாறாக இளைஞர்கள் கட்சிக்குள் உள்ளீர்க்கப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலிலேயே விசேடமாக பல காலத்துக்கு பிறகு 30 வயதை தொடாத ஒரு இளைஞன் எங்களுடைய கட்சியில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார். அது சாணக்கியன்.ஒரு சில மாதங்களிலேயே 30 வயது வந்துவிட்டது. ஆனால் அவர் பாராளுமன்றம் தெரிவு செய்யப்படும் போதும் 29 வயது காலப் பகுதியில் இருந்தார்.

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் இலங்கை தமிழரசுக் கட்சியின் வரலாற்றைப் பற்றி பேசுகிறவர்கள் என்ன விதமாக தந்தை செல்வா 1956ஆம் ஆண்டு தேர்தலில் மிகவும் இளையோர்களை வேட்பாளர்களாக முன்நிறுத்தினர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அநேகமானவர்கள் இதுவரை இருந்தவர்கள் தான் இப்போது முன்னிலைப் படுத்தப் பட்டவர்கள்.

படித்த இளைஞர்களை அவர் முன் நிறுத்தினார் 1952ஆம் ஆண்டு இரண்டே இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கொண்டிருந்த கட்சி 1956 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரைக்கும் பிரதான தமிழ் கட்சியாக தொடர்ந்து வந்திருக்கிறது.

ஆனால் அந்த நிலைப்பாடு இல்லாமல் இருப்பது போல் ஒரு தோற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த முறை ஒருவர்தான் அப்படியாக 30 வயதிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆனால் இந்த மாற்றம் அந்த ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வந்த விடயமே. இந்த விதமாக வடக்கிலும் கிழக்கிலும் இருக்கின்ற இளைஞர்களுக்கு ஒரு பாரிய உத்வேகத்தை கொடுத்திருக்கிறது என்பது எங்கள் எல்லோருக்கும் தெரிகிறது. அது ஒரு மாற்றம் என்ன விதமாக இளைஞர்கள் மத்தியிலே ஒரு எதிர்பார்ப்பினை ஒரு உற்சாகத்தை கொடுத்து இருக்கிறார் என்பதை நாங்கள் கண்கூடாக பார்க்கின்றோம். அப்போ 2,3,4 பேர்கள் அப்படியாக வந்திருந்தால் இன்னும் அவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும் என்று நாங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். வரப்போகின்ற காலங்களிலே அப்படியான விதத்திலே கட்சி சிந்திக்கவேண்டும்.

ஆற்றல் உள்ள படித்த இளைஞர்கள் யுவதிகளுக்கு கட்சியிலே சரியான இடம் கொடுக்கப்பட வேண்டும். எங்களுடைய பிரதிநிதியாக அவர்கள் அனுப்பப்பட வேண்டும். அப்போதுதான் இளைஞர்கள் எங்களுடைய பிரதிநிதிகள் அனுப்பப்படுகிறார்கள் என்ற எண்ணப்பாடு அவர்களுக்கு ஏற்படும். அந்த நேரத்தில் நாங்கள் பெப்ரவரி மாதத்தில் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரைக்கும் என்ற நடைபயணத்தினை ஒழுங்கு செய்து நடத்தியபோதும் இளைஞர்கள் கூட்டம் திரண்டு சாணக்கியன் ஈடுபாட்டினால் தான் அதிலே அவர் கொடுத்த தலைமைத்துவத்தினாலே அந்த முன்மாதிரியை பொதுவாக விரும்பிய இளைஞர்கள் என்ன விதமாக இப்போது அப்படியான தலைமைத்துவத்தை நாடி வருகின்றார்கள் என்பதை நாங்கள் காணலாம்.

இன்றைக்கும் நாங்கள் பொலிகண்டி க்கு சென்று அந்த நடைபயணம் முடிவடைந்த இடத்தை பார்வையிட்டு இருக்கின்றோம். அதற்குப் பிறகு சாணக்கியன் யாழ்ப்பாணம் இதுதான் முதல் தடவையானபடியால் சில சில சந்திப்புகள் அவர் செய்யலாம் என்ற நோக்கத்தோடு இந்த சிறிய ஒன்றுகூடலை நாங்கள் செய்து இருக்கின்றோம் என தெரிவித்தார்.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# பௌத்த மதகுருமார் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்திற்கு விஜயம்

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்திற்கு பௌத்த மதகுருமார் விஜயம் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் காணப்படும் இந்து மக்களின் மயான நிலத்தை மீண்டும் மீட்டுக்கொடுப்பதாக அங்குள்ள மக்களின் வேண்டுகோளிற்கு இணங்க அவர்கள் அங்கு சென்றுள்ளனர். குறித்த பகுதிக்கு கடும் பாதுகாப்புடன் வருகை தந்த பௌத்த மதகுருமார் இவ்விடயம் தொடர்பில் மக்களுடன் கலந்து ஆலோசனை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் அப்பகுதி மக்களுக்கு மீண்டும் குறித்த மயான நிலத்தை பெற்று கொடுப்பதற்கு முயற்சிப்பதாகவும் தமிழ் சிங்கள மக்கள் எல்லோரும் ஒரே இனம் என்று அங்கு உரையாற்றும் போது முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.



கடந்த வருடங்களில் அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர்ப்பிரதேசத்துக்குட்பட்ட அட்டப்பள்ளம் இந்துமயானமானது ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டத்திலீடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்ஸில் பயணிகளிடம் திருடியவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

**(எப்.முபாரக் )**

திருகோணமலையிலிருந்து கண்டிக்குச் சென்ற பயணிகள் பஸ்ஸில் பிட்பொக்கட் அடித்த ஒருவரை பொது மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரேயே பயணிகளினால் பிடித்து கந்தளாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது;

திருகோணமலையிலிருந்து நேற்று மாலை 4.00 மணிக்குச் கண்டிக்குச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பயணிகள் பஸ்ஸில் நான்காம் கட்டையிலிருந்து ஏறிய சந்தேக நபர் பஸ்ஸில் தூங்கிய பிரயாணி ஒருவரின் பணப்பொதியை திருடிய வேளை மற்றொருவர் கண்டு கூக்குரலிட்டு பயணிகள் சந்தேக நபரை பிடித்து கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் தொடர்பாக திருகோணமலை, கந்தளாய் மற்றும் தம்பலாகாமம் போன்ற பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்துள்ளதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.







# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர்கள் கிழக்கிற்கு விஜயம்

**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிதாக நியமிக்கப்பட்ட ஆணையாளர்கள் கிழக்கு மாகாணத்திலுள்ள திருக்கோணமலை மட்டக்களப்பு கல்முனை அம்பாறை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய காரியாலயங்களுக்கு உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றினை இவ்வாரம் மேற்கொண்டிருந்தனர்.

இதில் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஹர்ஸா நவரட்ண அநுசூயா சண்முகநாதன் மற்றும் புலனாய்வு விசாரணைகள் பணிப்பாளர் சுலாரி லியனகம என்பவர்கள் உள்ளடங்குவர்.

ஆணையாளர் ஹர்ஸா நவரட்ண இவ்விஜயம் பற்றி கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்தில் நடைபெற்ற சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போது கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள மனித உரிமை நிலவரங்கள் பற்றி உண்மை நிலையினை சிவில் குழுக்கள் மூலமாக கலந்துரையாடி தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் அவ்விடயம் ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் உள்ளடங்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கும் நோக்குடனேயே தாங்களது குழுவின் வருகை இருப்பதாகவும் இன நல்லிணக்கத்துடன் அனைவர்களும் சட்டத்தினை மதித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவுடன் இணைந்து சிவில் அமைப்புக்கள் பொறுப்புடன் செயலாற்ற வேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஆணையாளர் அநுசூயா சண்முகநாதன் கருத்துத் தெரிவிக்கும் போது;

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சிவில் அமைப்புக்கள் எழுத்து மூலம் முறைப்பாடுகளை ஆணைக்குழுவிற்கு கொடுக்கும் போது அதற்குரிய ஆவணங்களை பரிசீலனை செய்த பின் எவ்வித பாரபட்சமுமின்றி துரித நடவடிக்கை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

சிவில் மக்களின் கேள்விகளுக்கு பதிலளித்த புலனாய்வு விசாரணைகள் பணிப்பாளர் சுலாரி லியனகம மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளை மேம்படுத்தி பாதுகாப்பதற்காக முனைப்புடன் செயற்பட்டு வரும் சுதந்திரமான ஆணைக்குழு என்பதுடன் அரச நிருவாக நிறைவேற்றுத் துறையினர் மக்களது அடிப்படை உரிமைகளை மீறியிருந்தால் அல்லது மீறப்பட இருந்தால் அதற்காக நடவடிக்கை எடுப்பதுடன் அரசிற்கு பரிந்துரைகளைச் செய்கின்ற அதிகாரமும் இருக்கின்றது எனவும் அவ்வப்போது தேசிய ரீதியில் இடம்பெற்ற சிறுபான்மை மக்களுக்கான உரிமை மீறல்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு பரிந்துரைகளைச் செய்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் வடக்கு மாகாணத்திற்கும் சென்ற மாதம் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர் என்பதுடன் கிழக்கு மாகாண விஜயமும் அவர்களுக்கு மனித உரிமைகள் நிலையினை தெளிவாக விளக்கியிருக்கும் என்பதுடன் இவ்வாறான உயர் அதிகாரிகளின் வருகை எதிர்காலத்தில் வட-கிழக்கு மக்களுக்கு நன்மை பயக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலம் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# றைஸ்டார் ஜீனியர் பிறிமியர் கிரிக்கெட் லீக்- 2021 ஆரம்பித்தலும், சீருடை அறிமுகமும்



**(இஸ்ஸதீன் ஏ ஸிறாஜ்)**

பாலமுனை றைஸ்டார் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில். றைஸ்டார் ஜீனியர் பிறிமியர் கிரிக்கெட் லீக் 2021 கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் பிறிமியர் லீக் நான்கு கழக வீரர்களுக்கான வீரர்களுக்கான சீருடை அறிமுக நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை பாலமுனை பொது விளையாட்டு மைதான அரங்கில் இடம்பெற்றது.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல். எம்.பாயிஸ் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ். எம்.முஸம்மில், கழகத்தின் ஆலோசகர்களான பாலமுனை மின்ஹாஜ் மகாவித்தியாலய அதிபர் கே.எல்.உபைதுள்ளா, கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.இப்றாஹிம், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி விடுதி அத்தியட்சகர் எஸ்.எல். றகுமதுள்ளா, தொழிலதிபர் கே.எல்.எம்.ஜிப்ரி, கழகத்தின் செயலாளர் வை.எம்.அசாம், கழகத்தின் பொருளாளர் ஏ.றிஸ்மி, உட்பட கழகத்தின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



**திருகோணமலை உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற கிழக்கு மாகாண விளையாட்டு போட்டியில் மல்யுத்த போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் நடைபெற்ற மல்யுத்த போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் 11 தங்கம், 8 வெள்ளி, 2வெங்கலம் பதக்கம் பெற்று முதல் இடத்தினையும், 2 தங்கம், 4 வெள்ளி, 3 வெங்கலம் பெற்று திருமலை 2 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளது.**

# சர்வதேச சிலம்பம் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவனை பொன்னாடை அணிவித்து கௌரவிப்பு


**(ரக்ஸனா)**



சர்வதேச சிலம்பம் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவனை பொன்னாடை அணிவித்து கௌரவித்த சந்தரகாந்தன் எம்.பி.கடந்த வருடம் சர்வதேச சிலம்பம் சம்மேளனம் நடாத்திய சர்வதேச சிலம்பம் போட்டியில் இலங்கை சார்பாக பங்கு பெற்றி முதலிடமும் தங்கப்பதக்கம் வென்ற அமரசிங்கம் குமணன் அவர்களை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவித்ததுடன் தனது பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில் சிலம்பக் கலையை எமது பிரதேசத்தில் மென்மேலும் வளர்க தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தொடர்ந்து தனது பங்களிப்பினை வழங்கும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிசந்திரகந்தந்தன் தெரிவித்தார்.



# கிழக்கு ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சையில் மோசடி உடன் நடவடிக்கை எடுக்க மகஜர் கையளிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



கிழக்கு மாகாண பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட போட்டிபரீட்சையில் அநீதி இழைக்கப் பட்டுள்ளதாக பரீட்சாத்திகள் விசனம்தெரிவித்துள்ளனர்.

கடந்த 2021 பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாக காணப்படுகின்ற ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆங்கில உயர் தேசிய டிப்ளோமாதாரி களை சேர்த்துக் கொள்ளும் நோக்கில் இப் போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டது.

அதில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 03 மாவட்டங்களில் இருந்து சுமார் 600 இற்கும் மேட்பட்ட பரீட்சாத்திகள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இதன் போது பொது அறிவு மற்றும் நுண்ணரிவு முதலான 02 வகையிலான வினாத் தாள்கள் நடைபெற்றன.

அதில் இடம்பெற்ற நுண்ணறிவு பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்னர் வெளியாகி இருக்கலாம் சந்தேகிக்கின்றனர்.

மேற்படி நுண்ணறிவு வினாத்தாளில் காணப்பட்ட 20 க்கும் மேற்பட்ட வினாக்கள் பிரபல போட்டிப் பரீட்சை வளவாளரால் வெளியிடப்பட்ட புத்தகம் ஒன்றிலிருந்து எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதனை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என பரீட்சாத்திகள் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று 2018 ஆம் ஆண்டு SLAS பரீட்சையில் அதே குறிப்பிட்ட தனிநபரின் புத்தகத்திலிருந்து சுமார் 6 வினாக்கள் மட்டுமே எடுக்கப்பட்டிருந்தன.

இதனை பரீட்சார்த்திகள் முறைப்பாடு செய்து இருந்தனர் பின்னர் குறிப்பிட்ட நுண்ணறிவுப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டதுடன் மீள குறிப்பிட்ட பரீட்சை மட்டும் நடத்தப்பட்டது.

இதேவேளை கல்முனை வெஸ்லி கல்லூரியில் நடத்தப்பட்ட பரீட்சையில் 8 வினாத்தாள்கள் போதாமையால் நிழல் பிரதிகள் எடுத்து பரீட்சை குறிப்பிட்ட எட்டுப் பரீட்சார்த்திகளுக்கு, 10 நிமிடங்கள் பிந்தியே நடத்தப்பட்டது இப் பரீட்சையும் நுண்ணறிவு வினாப் பத்திரமே ஆனால் உரிய நேரத்துக்கு விடைப் பத்திரம் பெறப் பட்டது. இவ்வாறு பல குளறுபடிகள் நடந்தும் எவ்வித தீர்வும் எமக்குக் கிடைக்கவில்லை

எமக்கான தீர்வு இடைக்க வேண்டும். அது சம்பந்தமாக நேற்று திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள அவர்களை அவரது கந்தளாவில் உள்ள அலுவலகத்துக்கு சந்தித்து மகஜர் கொடுக்க முற்பட்டனர்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் அன்றைய தினம் கொழும்புக்குச் சென்றததனால், அவரது பிரத்தியேக செயலாளர் கே.எம். வாலுக அவர்களிடம் மகஜர் கையளிக்கப் பட்டன.இதன் போது குறித்த எம்.பியின் கிண்ணியா பிரதேச இணைப்பாளர் யு.எல்.பிர்தௌஸ் அவர்களும் உடனிருந்தார்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் எம்,பியிடம் கொடுப்பதாகவும் உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தான் கூறுவதாத் தெரிவித்தார்.

இதேவேளை ஆளுநர், கிழக்கு மாகாண பொதுச் சேவை செயலாளர் முதலானவர்களுக்கு, அறிவித்தும் தீர்வு கிடைக்கவில்லை என பரீட்சார்த்திகள் மேலும் தெரிவிக்கின்றனர்.




# இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது பொலிஸ் தினம் திருகோணமலையில் அனுஷ்டிப்பு





எப்.முபாரக்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது பொலிஸ் தினம் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த அனுஷ்டிப்பானது திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதய ஹேமந்த தலைமையில் நேற்று இடம் பெற்றுள்ளது.

1864ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி சஹான் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருந்தபோது உயிரிழந்ததாகவும் அதை நினைவுகூரும் விதத்திலும், கடமையிலிருந்த போது 3137 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 1610 பேர் காயமடைந்துள்ளதாகவும் இவர்களை ஞாபகம் ஊட்டும் விதத்தில் இந்த அனுஷ்டிப்பானது அனைத்து இடங்களிலும் இடம் பெற்று வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதே வேளை உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் மாற்றுத் திறனாளிகள் 50 பேருக்கு உலர் உணவுப் பொருட்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கும், மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கும் உதவிகளை வழங்க உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# 95 ஆயிரம்ருபா பெறுமதியான அதிர்ஷ்ட லாபச் சீட்டுகளைக் களவாடியவர் கைது

## காரைதீவில் சம்பவம்: சம்மாந்துறைப் பொலிஸில் சந்தேகநபர் ஒப்படைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்தபல நாட்களாக அதிஸ்டலாபச்சீட்டுக்களைத் திருடிவந்த நபரொருவர் நேற்று கையும்மெய்யுமாக பிடிபட்டுள்ளார்.

இச்சம்பவம் சம்மாந்துறைப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பிடிப்பட்ட நிந்தவூரைச்சேர்ந்த இளைஞரை காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கே.ஜெயசிறில் சம்மாந்துறைப்பொலிசில் ஒப்படைத்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதியில் உள்ள அதிஸ்டலாபச்சீட்டு விற்பனை நிலையத்தில் தினமும் இத்திருட்டு இடம்பெற்று வந்திருக்கிறது. தினமும் குறித்த நபர் வந்து 10டிக்கட்டுக்களுக்கான பணத்தைக்கொடுத்தவிட்டு கூடுதலான டிக்கட்டுக்களை களவாகக் கொண்டு சென்றிருக்கிறார்.

அவற்றில் பரிசுகிடைத்த டிக்கட்டுக்களை மறுநாள் கொண்டுவந்து மாற்றி பணத்தைப்பெறுவது வழமை.

10டிக்கட் வாங்கிச்செல்பவர் மறுநாள் 25டிக்கட்டுக்களை பணமாக மாற்றிச்செல்வது தொடர்பாக கேட்டபோது எனது உறவினர்கள் எடுத்த டிக்கட்டுக்ககள அவை என்று கூறணீ வந்திருக்கிறார்.

கடைக்காரருக்கு சந்தேகம் வரவே நேற்று உசாரானார்.

குறித்த நபர் வந்து 10டிக்கட்டுக்களை கேட்டிருக்கிறார். இவர் சரி எடுங்கள் என்று விட்டு மறைவாக அவதானித்திருக்கிறார். அவர் 175டிக்கட்டுக்களை அப்படியே எடுத்து உள்ளாடைக்குள் செருகியிருக்கிறார். உடனே பாய்ந்து பிடித்ததும் குட்டு அம்பலமாகியது. மக்களும் கூடிவிட்டனர். தவிசாளருக்குதகவல் பறந்தது. அவரும் பொலிசாருக்கு கூறிவிட்டு ஸ்தலத்திற்கு



வந்துள்ளார்.

அங்கு குறித்த நபரை விசாரித்த போது பல நாட்கள் செய்துவந்த திருட்டை அவர் ஒப்புக்கொண்டார். மொத்தமாக இதுவரை 95ஆயிரம் ருபா பெறுமதியான டிக்கட்டக்களை அவர் திருடியிருப்பதாக கடைக்காரர் முறையிட்டார்.பொலிசாரும் வந்து விசாரித்துவிட்டு தவிசாளிடம் வாகனத்தில் ஏற்றிக்கொண்டுவருமாறு கூறிவிட்டுச்சென்றார். தவிசாளரும் அவரைக் கொண்டுசென்று ஒப்படைத்தார்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





திருமலையில் நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாண கடற்கரை கபடியில் ஆண்கள் பெண்கள் இரு அணியும் மட்டக்களப்பு முதலாம் இடம் திருகோணமலை இரண்டாம் இடம்

# சர்வதேச 09 ஆவது வனாந்தர தினத்தினை முன்னிட்டு மரக்கன்றுகள் நாட்டல்



(திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)

சர்வதேச வனாந்தர தினத்தினை முன்னிட்டு வனமீள் உருவாக்கம் ஆரோக்கிய வாழ்வின் வழி எனும் தொனிப் பொருளில் கீழ் அக்கரைப்பற்று வனபரிபாலனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் கோரைக்களப்பு ஆற்றங்கரையில் மருத மரக் கன்றுகள் நட்டு வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வானது அக்கரைப்பற்று வனபரிபாலய திணைக்களத்தின் வன வெளிக்கள உத்தியோகத்தர் எம்.எம்.தாஹீர் தலைமையில் விநாயகபுரம் முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் நேற்று இடம்பெற்று இருந்தன.

இவ் சர்வதேச வனாந்தர தினமானது 2012ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் முதலாவது சர்வதேச வனாந்தர தினம் 2013ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி முதல் முதலாக இலங்கையில் கொண்டாப்பட்டு இருந்ததுடன் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வருவதுடன் தற்போது இடம்பெருவது ஒன்பதாவது சர்வதேச வனாந்தர தினமாகும்.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்து இருந்ததுடன் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா அக்கரைப்பற்று வனபரிபாலன திணைக்கள வட்டார வன அதிகாரி ஏ.எல்.இல்லியாஸ் வனவிரிவாக்கல் உத்தியோகத்தர் ஏ.தியாகராஜா திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆலய நிருவாகிகள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்திருந்தனர்.

# கல்முனை - காரைதீவு கடற்கரை வீதி கார்பட் வீதியாக புனரமைப்பு

( நூருள் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கத்திற்கமைய நாட்டில் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்ட கல்முனை தொடக்கம் காரைதீவு வரையான கடற்கரை வீதி காபட் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான வேலைத்திட்டத்தின் ஆரம்பக்கட்ட அடிக்கல் நடும் நிகழ்வு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி முக்கியஸ்தகரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபை உறுப்பினரும், வன ஜீவராசிகள் இராஜங்க அமைச்சர் விமல வீர திஸ்ஸாநாயக்கவின் இணைப்பாளர் றிஸ்லி முஸ்தபாவின் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிமை இடம்பெற்றது.

அத்துடன் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதேச செயலகத்திற்கு ஒரு



மைதான அபிவிருத்தி எனும் வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது கடற்கரை பௌஸி மைதானத்திற்கான கரப்பந்தாட்ட மைதானத்தை அபிவிருத்தி செய்ய இதன் போது அடிக்கல் நடப்பட்டது.

இந்த ஆரம்ப நாள் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் டி .எம் . வீரசிங்க பிரதம அதிதியாகவும் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் திலக்ராஜபக்ஷ கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டதுடன் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிரில், காரைதீவு பிரதேச சபை பிரதி தவிசாளர் ஏ.எம். ஜாஹிர், நாவிதன்வெளி பிரதேச சபை உதவி தவிசாளர் ஏ.ஏ. சமட், வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டீ. வீரசிங்கவின் இணைப்பாளர் ஜௌபர் மற்றும் பொது ஜன பெரமுன முக்கியஸ்தர்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டுக் கழக வீரர்கள், நிர்வாகிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தே.கா உறுப்பினர் சப்ராஸ் மன்சூர் பதவியை உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும்

## : சக வேட்பாளர்கள் கூட்டாக வேண்டுகோள்!



(மாளிகைக்காடு நிருபர்)

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கல்முனை மாநகர சபையில் குதிரை சின்னத்தில் களமிறங்கிய வேட்பாளர்களுக்கிடையிலான சந்திப்பும், கல்முனை மாநகர சபை உறுப்பினர் விவகாரம் தொடர்பிலான கலந்துரையாடலும் ஞாயிற்று கிழமை கல்முனையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரும், அக்கட்சியின் சட்டவிவகார, கொள்கை அமுலாக்கள் மேலதிக செயலாளருமான சட்டத்தரணி ஏ.எல்.எம். றிபாஸ், அக்கட்சியின் கல்முனை மத்தியகுழு பிரதித்தலைவரும், 12ம் வட்டார வேட்பாளருமான மௌலவி சபா முகம்மத், அக்கட்சியின் உயர்பீட உறுப்பினரும், மருதமுனை வேட்பாளருமான நூருல் பௌஸ், மருதமுனை இளைஞர் அமைப்பாளரும், மருதமுனை வேட்பாளருமான சமட் ஹமீத், நற்பிட்டிமுனை அமைப்பாளரும், வேட்பாளருமான சப்ரோஸ் ஜமால், 12ம் வட்டார வேட்பாளர் ஏ.பி. தன்பீர், மற்றும் பட்டியல் வேட்பாளர்கள், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலின் போது, கடந்த 2018 இல் நடைபெற்ற கல்முனை மாநகர சபையில் தேசிய காங்கிரஸ் சார்பில் பெறப்பட்ட 1522 வாக்குகளுக்கு கிடைக்கப்பெற்ற ஆசனத்தை சுழற்சி முறையில் பங்கிடுவது என எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக முதலில் சபை உறுப்பினராக சென்றிருந்த அக்கட்சியின் சார்பிலான வேட்பாளரும், சட்டவிவகார, கொள்கை அமுலாக்கள் மேலதிக செயலாளருமான சட்டத்தரணி ஏ.எல்.எம். றிபாஸ் தனது ஒருவருட பூர்த்தியின் பின்னர் இராஜினாமா செய்தவுடன் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு வாக்கு பட்டியலில் நான்காம் இடத்தில் இருந்த கல்முனையை சேர்ந்த சப்ராஸ் மன்சூர் எல்லோரது விருப்பத்தின் பேரிலும் நியமிக்கப்பட்டார்.

ஆனால் அவருடைய பதவிக்காலமான ஒருவருடம் முடிவடைந்து மேலதிகமாக ஒரு வருடமுமாக இரு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் அவரை தொடர்ந்து அடுத்தவர் அந்த இடத்திற்கு செல்ல வழிவிட்டு இராஜினாமா செய்யாமல் தொடர்ந்து இருந்து வருவது பொருத்தமற்ற செயல் என்றும் அவர் உடனடியாக இராஜினாமா செய்ய முன்வரவேண்டும் என்றும் இங்கு தீர்மானம் எட்டப்பட்டது. மேலும் கட்சியின் நெறிமுறை, தலைமையின் நம்பிக்கைக்கு கட்டுப்பட்டு உடனடியாக சப்ராஸ் மன்சூர் இராஜினாமா செய்வதே அவரது கௌரவத்திற்கு சிறந்தது என்று இங்கு ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டு இந்த முடிவுகள் தலைமைக்கும், கட்சி வட்டாரங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# தனியார் கைத்தொலைபேசி நிலையம் உடைக்கப்பட்டு திருட்டு

(பாறுக் ஷிஹான்)

தனியார் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று திருடர்களால் உடைக்கப்பட்டு மீள்நிரப்பு அட்டைகள் கைத்தொலைபேசிகள் பணம் என்பன களவாடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை பிரதான வீதியில் உள்ள தனியார் தொலைபேசி விற்பனை நிலையத்தில் நேற்று அதிகாலை இத்திருட்டு முயற்சி சம்பவம் பதிவாகியுள்ளது.

இம்முயற்சியில் இரு திருடர்கள் ஈடுபட்டுள்ளதுடன் தனியார் தொலைபேசி விற்பனை நிலையத்தினையே முழுமையாக உடைத்து திருடி சென்றுள்ளதுடன் ஏனைய கடைகள் உடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் பலனளிக்காமையினால் அவர்கள் கொண்டு சென்ற இரும்பு வெட்டும் உபகரணத்தை (Cuter)



கைவிட்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் துவிச்சக்கரவண்டி ஒன்றில் வருகை தருவதும் தங்கள் அடையாளம் தெரியாத படி உரப்பையினால் முகங்களை மூடி இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதை அருகே உள்ள வர்த்தக நிலைய சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

இப்பகுதியில் கடும் மழை பெய்த நிலையில் இத்திருட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதுடன் சம்பப இடத்திற்கு தடயவியல் நிபுணர்கள் கல்முனை பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதை காண முடிந்தது.

குறித்த தனியார் கைத்தொலைபேசி விற்பனை நிலையத்தில் 30 கைத்தொலைபேசிகள் 55 ஆயிரம் ரூபா பணம் பல்வேறு தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் என்பன திருடர்களால் எடுத்து செல்லப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர் தெரிவித்தார்.

மேலும் மேற்குறித்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அமைப்பான ஷோபா ZOPA கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மாணவர்களின் நலன்கருதி பழைய மாணவர்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட நூறு சோடி காலணிகளை அண்மையில் கல்லூரி முதல்வர் எம்.ஐ.எம்.ஜாபிரிடம் கையளித்தனர். இந்நிகழ்வில் ஷோபா ZOPAஅமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

# அம்பாறை மாவட்டத்தில் = பசுமைப் புரட்சி =

## முஷரப் எம்.பி. ஏற்பாடு!



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாரை மாவட்டத்தில் பசுமைப்புரட்சியை ஏற்ப டுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஸர்ரபினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத்திட்டத்தின் கீழ் வரிப்பத்தான்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் வளாகத்தில் மரங்கள் நடப்பட்டது.

இறக்காமம் பிரதேச சபை உறுப்பினர் அன்வர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அதிதிகளாக இறக்காமம் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் நௌபர் மௌலவி, ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஹாமீட் லெப்பை, மக்கள் காங்கிரஸ் அமைப்பாளர் சலீம் மௌலவி, சட்டத்தரணி பாறூக் சாஹிப்,பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல்.நியாஸ், இறக்காமம் கட்சி முக்கியஸ்தர் ரஜா,பிரதேச கட்சி முக்கியஸ்தர்கள், சமூக சேவையாளர்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மரங்களை நட்டு வைத்தனர்.

அத்தோடு வரிப்பத்தான்சேனை ஜும்ஆப் பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு நம்பிக்கையாளர் சபையினர் கொண்டு வந்தனர்.

தன்னுடைய பதவிக்காலத்தில் தன்னால் முடிந்த உதவிகளையும், முன்னடுப்புக்களையும் இப்பள்ளிவாசலுக்கும், இக்கிராமத்திற்கும் செய்யவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் இங்கு தெரிவித்தார்.

மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் ஐந்து வருடத்திற்குள் ஒரு மில்லியன் மரங்களை அம்பாரை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான நோக்கோடு இவ்வேலைத்திட்டம் முன்னேடுக்கப்பட்டு வருகின்றது.

வீடுகள், பொது இடங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள்,வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# போதைப் பொருள் கடத்தலை தடுக்க நிந்தவூரில் இராணுவக் காவலரண்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பகுதியில் உள்ள அல்லிமூலை அருகில் புதிய நிரந்திர சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளது

கடந்த புதன்கிழமை (17) மதியம் திடிரென அப்பகுதிக்கு வந்த சுமார் 15 க்கும் அதிகமான இராணுவத்தினர் நிந்தவூர் பகுதியில் உள்ள அல்லிமூலை சந்திக்கு அருகே நிரந்திர சோதனை சாவடி ஒன்றை அமைத்து சோதனை நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இப்பகுதியில் இடம்பெறுகின்ற போதைப்பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்காக இம்முகாம் அமைக்கப்பட்டுள்ளதுடன் இடையிடையே அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையணி ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறது.இது தவிர இரவு வேளையில் ஐவர் கொண்ட இராணுவத்தினரின் குழு ஒன்று மற்றுமொரு தேடுதல் நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்து வருகின்றது.

மேலும் இவர்கள் பகல் இரவு வேளைகளில் வீதிகளில் செல்லும் சந்தேகத்திற்கு இடமானவர்கள் வாகனங்களை இடைமறித்து சோதனை செய்து பாதுகாப்பினை குறித்த பிரதேசத்தத்தில் உறுதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.




கொரோனா அனர்த்தத்தின் பின்னர் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் கஞ்சா கடத்தல்கள்இ அனுமதி பத்திரமின்றி மணல் அகழ்வு போன்ற சம்பவங்களை முறியடிப்பதற்காக இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தவிர கொரோனா சுகாதார நடைமுறைகளை கண்காணித்தல் முகக்கவசம் அணியாதோரை வழிப்படுத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு விடயங்கள் உள்ளிட்டவைகளில் கவனம் செலுத்தும் முகமாகவும் இந்நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மருதமுனை கல்முனை நற்பிட்டிமுனை சாய்ந்தமருது காரைதீவு நிந்தவூர் சம்மாந்துறை அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் இருந்து இச்சந்தியில் ஊடாக பயணம் செய்பவர்கள் பரிசோதனை செய்யப்பட்டும் வாகனங்களின் இலக்கத்தகடு பதியப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.